**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ். 78/2014** **நாள். 30.01.2024**

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாள் வாதி தரப்பு 5 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | தொழில் | |
| த. பெ./க.பெ. | மாணிக்ககவுண்டர் | சாதி | |
| கிராமம் | ஈயகுணம் | மதம் | |
| வட்டம் | | வயது | 67 |

**வ..சா.5**

**குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் படிக்க தெரியும். பள்ளி கூடம் சென்று படிக்கவில்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். வாதிக்கு நான் தாய்மாமன் முறையாகும். வா.சா.2 சண்முகம் என்பவரின் தந்தை எனது சம்பந்தி ஆவார். நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் லேவாதேவி தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. யாராவது கேட்டால் வட்டிக்கு கடன் கொடுப்பேன். நான் கடன் கொடுத்து புரோநோட்டின் பேரிலும் அடமான பத்திரத்தின் பேரிலும் பல வழக்குகளை நீதிமன்றத்தில் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. என் மனைவி தேவி மற்றும் வாதி சீனிவாசன் பெயரில் வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அந்த வகையில் என் சம்பந்தி சீனிவாசன் பெயரில் புரோநோட்டு தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்து நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லி தான் இவ்வழக்கு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு நான் தான் செலவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல . இந்நீதிமன்றத்தில் ஓ.எஸ் 113/2016 வழக்கில் 2 ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. அந்த அடமான பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து மட்டும் போட்டுள்ளேன். மேற்படி வழக்கில் 2,முதல் 4 சாட்சிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் . உறவினர்கள் இல்லை. என் ஊரை சேர்ந்தவர் மூலமாகவும், உறவினர் மூலமாகவும் பல வழக்குகளை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி குடும்பத்திற்கும் எனக்கும் எந்த பழக்க வழக்கமும் கிடையாது. பிரதிவாதி மேல்மலையனுரை சேர்ந்தவர். 1 ம் பிரதிவாதிக்கு 2 பெண்கள், 1 ஆண் வாரிசுகள்

ஆவார். 1ம் பிரதிவாதியின் மனைவி பெயர் சின்னகண்ணு ஆகும். 1ம் பிரதிவாதிக்கு எந்த எந்த ஊரில் எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார். அவர் எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு தெரியாது. பாண்டு, அடமானம் ஆகிய ஆவணங்களின் பேரில் வழக்கறிஞர் பாண்டுரங்கன் என்பவர் மூலமாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நிலம் சம்பந்தமாக ஒரு வழக்கு மட்டும் தாக்கல் செய்தேன். என் மனைவி தேவிகா என்பவர் மூலமாக வழக்ககறிஞர் பாண்டுரங்கன் மூலம் நான் வழக்கு தாக்க்ல செய்தேன் என்றால் சரியல்ல. ஓ.எஸ். 28/2014 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் வாதி சீனிவாசன் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். **என்னிடம் காண்பிக்கப்படும் வழக்குரை ஓ.எஸ். 25/2014 வழக்கிற்கானதுஎன்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.1 / வா.சா.5 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

III ஓ.எஸ்.73/2005 என்ற வழக்கை நான் இந்நீதிமன்றத்தில் நடராஜன், மற்றும் சிலருக்கு எதிராக தாக்கல் செய்தேன். அதில் தீர்ப்பாணை பிறக்ககப்பட்டது. **அந்த தீர்ப்பாபணை சான்றிட்ட நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது பி.சா.ஆ.2 /வா.சா.5 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** நான் இந்நீதிமன்றத்தில் ஓ.எஸ். 48/2006 என்ற வழக்கை தாக்கல் செய்து அதன் பேரில் பிறப்பக்கப்பட்ட தீர்ப்பாணையின் பேரில் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், விழுப்புரத்தில் ஏ.எஸ் 25/2006 என்ற மேல்முறையீட்டை தாக்கல் செய்தேன். **அந்த மேல்முறையீட்டின் சான்றிட்ட நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான் அது .பி.சா.ஆ.3/ வா.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இறந்து போன ஏழுமலை . சண்முகம் என்பவரிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும் ,பாண்டு எதுவும் எழுதி தரவில்லை என்றாலும் சரியல்ல. தாவா பாண்டு எங்களால் ஜோடிக்கப்பட்டது எனறால் சரியல்ல. தாவா பாண்டை ஜோடித்துக்கொண்டு பிரதிவாதிகளிடம் பணம் பறிபதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்கு மூலம் பாரா 4 ல் வாதி சீனிவாசனிடம் கடந்த 23.06.2014 தேதியில் பிராம்சரி நோட்டிற்கான அசல் ரூ.5 லட்சத்தை வட்டி தொகையும் சேர்த்து பெற்றுக்கொண்டு பிராம்சரி நோட்டில் மேடுஓவர் எழுதிக்கொடுத்துவிட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஜோடிக்கப்பட்ட பாண்டிற்கு நான் சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் என்றால் சரியல்ல.